<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>

<u>அ.வ.எண். 255/2012</u>

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **28.11.2025** |
| **பெயர்** | **சகுந்தலா** |
| **த/பெ** | **முத்து** |
| **சாட்சி** | **PW2** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.11.p.m**

**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. இந்த வழக்கை யார் பெயரில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் கிளியம்மாள் வகையறாக்கள் மீது தாக்கல் செய்துள்ளோம். என் தந்தை பெயர் சின்னபன். என் தாத்தா பெயர் கண்ணாயிரம். கண்ணாயிரத்திற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள். அவர்கள் கந்தசாமி, சின்னப்பன் மற்றும் கண்ணன். இவர்களில் மூத்தவர் கண்ணன். 2 வது சின்னப்பன் 3 வது கந்தசாமி. வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீர்ணம் என்ன என்றால் 6 ஏக்கர். வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளோம் என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்தோம். நான் சின்னப்பனின் மகள். என் சகோதரியான சரோஜாவும் சின்னப்பனின் மகள்.

2. முதல் 6 பிரதிவாதிகள் கந்தாசமியின் வாரிசுகள். என் தாயார் பெயர் முனியம்மாள். கண்ணன் வாரிசுகளாக இந்த வழக்கில் யார் உள்ளார்கள் என்றால் 7 மற்றும் 8ம் பிரதிவாதிகள். இவர்களை தவிர வேறு யார் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் பாலா மீதும் மோகன் ரெட்டி மீதும் தாக்கல் செய்துள்ளார். எதற்காக 9 மற்றும் 10 ஆம் பிரதிவாதிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அவர்கள் வழக்கு சொத்தை வாங்கிய காரணத்தினால் அவர்கள் மீதும் தாக்கல் செய்துள்ளோம். கந்தசாமி வாரிசுகளுக்கும் கண்ணன் வாரிசுகளுக்கும்

வாதிகளுக்கும் விரோதமா அல்லது சுமுகமான உறவா என்றால் சுமுகமான உறவு தான், விரோதம் எதுவும் இல்லை. 9 மற்றும் 10 பிரதிவாதிகள் யாரிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் கிளியம்மாள் வகையறாக்களிடமிருந்து கிரையம் பெற்றார்கள்.

3. கண்ணன் வகையறாக்காளான 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் என்ன செய்தார்கள் என்றால் வழக்கு சொத்தை அவர்கள் விற்றுவிட்டார்கள். தாவா சொத்து குறித்து இதற்கு முன்பு ஏதேனும் வழக்கு நடந்ததா என்றால் நடந்தது எனக்கு தெரியாது. வில்லங்கம் போட்டு பார்த்த போது தான் தெரியவந்தது. வில்லங்கம் போட்டு பார்த்தபோது என்ன தெரியவந்தது என்றால் கிளியம்மாள் வகையறா 9 ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததும் அவர் 10ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததும் தெரியவந்தது. வேறு என்ன தெரியவந்தது என்றால் எங்களுக்கு பணம் யாரும் கொடுக்கவில்லை.

4. அதன்பிறகு 1ம் பிரதிவாதியிடம் சென்று அது குறித்து கேட்டோமா என்றால் கேட்டேன் விற்பனை செய்தால் கொடுப்பதாக கூறினார். கண்ணன் வகையறாக்கள் என்ன செய்தார்கள் என்றால் எங்களை விற்பதற்கு கூப்பிட்டு கொண்டு இருந்தார்கள். பின்பு அவர்கள் பணம் வாங்கியதை எங்களிடம் கூறவில்லை. தாவா சொத்துக்கள் கண்ணாயிரத்தின் பூர்வீக சொத்துக்களா என்றால் இல்லை, கண்ணாயிரத்தின் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து வாங்கிய சொத்துக்கள். எந்தெந்த நிலம் யார் யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்ற விவரத்தினை குறிப்பிட்டு வழக்குரையிலோ அல்லது வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன மூவரும் சேர்ந்து நிலத்தை வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்கள் மூவருக்குள் பாகப்பிரிவினை செய்துகொண்டார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் செய்யவில்லை.

5. தாவா சொத்துக்களை யார் விவசாயம் செய்தது என்றால் மேற்சொன்ன மூவரும் சேர்ந்து தான் செய்தார்கள். குடும்பத்தில் நல்லது மற்றும் கெட்டது மூவரும் சேர்ந்து தான் செய்தார்களா என்றால் சேர்ந்து தான் செய்தார்கள். என் தகப்பானருக்கு சொந்த ஊர் என்ன என்றால் பஞ்செட்டி. எனக்கு திருமணம் ஆன பிறகு நான் பெரம்பூர் சென்றுவிட்டேனா என்றால் ஆமாம். என் சகோதரியான 1ம் வாதி திருமணம் ஆனபிறகு புழலுக்கு சென்றுவிட்டரா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியும் அவரடன் உடன் பிறந்தவர்களும் சென்னை கொருக்குபேட்டையில் வசித்து வந்தார்களா

என்றால் ஆமாம். 7 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் மீஞ்சுரை அடுத்த கொரஞ்சுர் ரெட்டி பாளையத்திற்கு சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். மூன்று சகோதரர்களில் கந்தசாமிக்கு தான் 2, 3, 5 மற்றும் 6 பிரதிவாதிகள் குமாரர்களாக பிறந்தார்கள் என்றால் சரிதான்.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 12.35 p.m.**